சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 99/2019

பெயர் திரு. செல்லப்பன் **நாள்.** 06.06.2025

**வாதி சாட்சி 2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1.வாதி மற்றும் பிரதிவாதிகள் எங்கள் ஊரை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். 1ம் வாதிக்கு வழக்கு சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியும். அது எவ்வாறு எனக்கு தெரியும் என்றால் 1ம் வாதி 26 செண்ட் நிலத்தை ரெட்டியாரிடமிருந்து வாங்கினார். அவர் எந்த வருடம் கிரையம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. எவ்வளவு தொகை கிரையத்திற்கு பேசி கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. அந்த கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் எதுவும் போடவில்லை. வாதியும், அய்யாசாமியும் பிரதிவாதிகளை வழக்கு சொத்தை அனுபவிக்க எந்த ஆண்டு அனுமதி அளித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. யார் முன்னிலையில் அனுமதி அளிக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. எந்த இடத்தில் வைத்து அனுமதி கொடுக்கப்பட்டது என்றால் பஞ்சாயத்தில் வைத்து அனுமதி கொடுக்கப்பட்டது. பஞ்சாயத்து நடந்த போது நான் என் வயலுக்கு சென்று விட்டேன். வெள்ளியான், அப்பாவு மற்றும் கிருஷ்ணன் ஆகியோர் எங்கள் ஊரைச் சார்ந்தவர்கள் என்றால் இல்லை. கிருஷ்ணன் மட்டும் எங்கள் ஊரைச் சார்ந்தவர். மேற்கண்ட மூவர் முன்னிலையில் 1993ம் வருடம் பஞ்சாயத்து ஏற்பட்டு அவர்கள் முன்னிலையில் வழக்கு புல எண்ணில் 13 செண்ட் 1ம் பிரதிவாதிக்கு பாகத்தில் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் வாதிக்கு உறவினர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை